## மே – 23 –புதன்

### புனித அருளப்பர் பப்டிஸ்ட் தெரோசி

### “ நமக்கு எதிராக இராதவர் நம் சார்பாக இருக்கின்றார். (மாற்.9:40)

## முதல் வாசகம் : யாக்கோபு 4 : 11– 17

சகோதர சகோதரிகளே!, உங்களுள் ஒருவர் மற்றவரைப் பழித்துரைக்கவேண்டாம். தம் சகோதரர் சகோதரிகளைப் பழித்துரைப்போர் அல்லது அவர்களுக்குத் தீர்ப்பு அளிப்போர் திருச்சட்டத்தைப் பழித்துரைக்கின்றனர் அச்சட்டத்துக்கு எதிராகத் தீர்ப்பு அளிக்கின்றனர். சட்டத்துக்கு எதிராக நீங்கள் தீர்ப்பு அளிக்கும்போது நீங்கள் அதைக்கடைப்பிடிப்பவராக அல்ல, மாறாக அதற்கு எதிராகத் தீர்ப்பு அளிக்கும் நடுவர்களாக ஆகிவருகிறீர்கள்.திருச்சட்டத்தைக் கொடுத்தவரும் தீர்ப்பு அளிப்பவரும் ஒருவரே. அவரே மீட்கவும் அழிக்கவும் வல்லவர். அவ்வாறிருக்க உங்களை அடுத்திருப்பவருக்குத் தீர்ப்பளிக்க நீங்கள் யார்?”இன்றோ நாளையோ குறிப்பிட்ட நகரத்துக்குப் போய் அங்கே ஓராண்டு தங்கி வாணிகம் செய்வோம் பணம் ஈட்டுவோம்” எனச்சொல்லுகிறவர்களே சற்றுக்கேளுங்கள்.நாளைக்கு உங்கள் வாழ்க்கை எப்படி இருக்கும் என்பது உங்களுக்குத் தெரியாதே! நொடிப்பொழுதில் தோன்றி மறையும் புகை போன்றவர்கள் நீங்கள்.ஆகவே அவ்வாறு சொல்லாமல், ”ஆண்டவருக்குத் திருவுளமானால், நாங்கள் உயிரோடிருப்போம் இன்னின்ன செய்வோம்” என்று சொல்வதேமுறை.இப்பொழுதோ நீங்கள் வீம்பு பாராட்டிப் பெருமை கொள்கிறீர்கள். இது போன்ற பெருமையெல்லாம் தீமையானது.நன்மை செய்ய ஒருவருக்குத் தெரிந்திருந்தும் அவர் அதைச் செய்யாவிட்டால், அது பாவம்.

**பதில்பாடல் :** ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்
ஏனெனில் விண்ணரசு அவர்களதே

## நற்செய்தி : மாற்கு 9 : 38 – 40

அக்காலத்தில் யோவான் இயேசுவிடம், ”போதகரே, ஒருவர் உமது பெயரால் பேய்கள் ஓட்டுவதைக்கண்டு, நாங்கள் அவரைத் தடுக்கப்பார்த்தோம். ஏனெனில் அவர் நம்மைச் சாராதவர்” என்றார். அதற்கு இயேசு கூறியது ”தடுக்கட்டாம். ஏனெனில் என்பெயரால் வல்லசெயல் புரிபவர் அவ்வளவு எளிதாக என்னைக் குறித்து இகழ்ந்து பேசமாட்டார்.ஏனெனில் நமக்கு எதிராக இராதவர் நம் சார்பாக இருக்கிறார்“ என்றார்.

**தியானம்:** நாம் இறைவனைத் தேடி வருவது சுய நலத்திற்காகவா? அல்லது இறைவன் மீதும், அயலவன் மீதும் கொண்டுள்ள அன்பிற்காகவா? என சிந்தித்துச் செயல்பட இன்றைய இறைவார்த்தைகள் அழைக்கின்றது. போதகரே ஒருவர் உமது பெயரால் பேய்களை ஓட்டுவதைக் கண்டு நாங்கள் அவரைத் தடுக்கப்பார்த்தோம் ஏனெனில் அவர் நம்மைச்சாராதவர் (மாற்.9:3) என இயேசுவிடம் யோவான் கூறியது இது. இவ்வாறான மனநிலைதான் தீமைகளின் பிறப்பிடமாக உள்ளது. எனவே நம்மைச் சாராதவர்கள் நமக்கு எதிரானவர்கள் அல்ல நன்மையான காரியங்கள் யார் செய்தாலும் நாம் அதை ஏற்கவேண்டும். இயேசு எல்லோருக்கும் சொந்தமானவர் அவரது திருப்பெயர் யார் நாவிலும் ஒலிக்கலாம், அவரது மீட்பை வாழ்வையும் எல்லோரும் பகிர்ந்து கொள்ளலாம். மனிதகுலத்தை ஒன்றினைத்து இறையரசை உருவாக்க வந்தவர் இறைமகன் இயேசு. அவரது போதனைகளின் படியும், நடபடிக்கைகளின் படியும் யார் எதைச் செய்ததாலும் அது நல்ல செயலே. இயேசுவின் சீடர்கள் அவரைப் பின்பற்றி அவர்மீது கொண்டிருந்த அன்பின் காரணமாகவே என்று வெளிப்படையாகத் தோன்றினாலும் அவர்களது உள்நோக்கம் சுயநலமே என்பதை இன்றைய நற்செய்தி சுட்டிக்காட்டுகின்றது. ஆகவேதான் எமது ஆன்மீக பணிகளோ, மற்றும் சமூக பணிகளோ எதுவாக இருந்தாலும் சுயநல நோக்கங்கள் அல்லாதவையாக எமது ஒற்றுமையில்தான் இறையரசு முழுமை பெறும் என்பதை உணர்ந்தவர்களாக அதற்காக உழைப்போம்.